# மரணத்தை ஜெயித்தார்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதோ உங்களுக்கு விருப்பமான செய்தியொன்று, ஒரு போதும் நிகழ்ந்திராத நிகழ்ச்சி. அது என்னவென்றால் எவரும் மரித்து, பின்னர் மரணத்தை ஜெயித்து எழுந்திருக்கவில்லை. ஆனால் ஒருவர் மரித்து, பின்னர் உயிர்த்தெழுந்தார் என்பதே அந்த நிகழ்வு. இந்த அதிசய மனிதர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் மரணத்தை ஜெயித்து எழுந்து ஜீவித்து வருகிறார் என்று நிரூபித்தார். அவர் மனிதர்களோடு மனிதனாய் நாற்பது நாட்கள் சஞ்சரித்து மீண்டும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் இன்னும் வாழ்பவராய் இருக்கின்றார். அநேகருக்கு அவர் காணப்பட்டிருக்கிறார். இவரைச் சந்தித்த மனிதர்களின் வாழ்க்கை பலவித மாற்றங்களுக்குள்ளாகி உள்ளது. இந்த அற்புத மனிதர் இயேசு கிறிஸ்துவே.


இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் பிறந்த போது அகுஸ்து ராஜன் ஆட்சி செய்து வந்தான். இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்து பலஸ்தீனாவில் வாழ்ந்த மரியாள் என்னும் கன்னிகையின் வயிற்றில் பரிசுத்த ஆவியினால் கருவுற்று மனிதனாக இவ்வுலகத்தில் பிறந்தார். தனது முப்பது வருட காலம் ஒரு தச்சனாக நாசரேத்தில் வசித்து வந்தார். பின்னர் 3½ வருடங்கள் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி சுற்றுப்புற நாடுகளுக்குப் பிரயாணம் செய்து உபதேசித்து வந்தார். அவருடைய போதனையானது இவ்வுலகத்தைப் படைத்து ஆட்சி செய்து வரும் இறைவனை நோக்கிப்பார்க்கும் படியாக அதிகாரத்துடன் அமைந்திருந்தது. அக்காலத்தில் அவர் அற்புதங்களைச் செய்தும், நோய்களைக்குணப்படுத்தியும், பிசாசுகளைத் துரத்தியும் மனிதருக்குப் பெரிய மகத்தான சேவையை செய்து வந்தார். அவரைச்சுற்றி ஒரு சீஷர் கூட்டம் ஒன்று இருந்தது. அக்கூட்டத்திலிருந்து 12 பேரைத் தெரிந்து எடுத்துக்கொண்டார். அவர்களில் ஒருவனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதாஸ் ஒரு துரோகியாகி 30பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை எதிரிகளிடம் காட்டிக்கொடுத்தான்.

இயேசு இவைகள் எல்லாம் நிறைவேறும் என்று தெரிந்திருந்தும் அதனை அவர் எதிர்க்காமல் எதிரிகளால் கொல்லப்படவும் ஆயத்தமாகவே இருந்தார். இது ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலாகும்.

இயேசுவுக்கு எதிராக ஒரு பொய்க்குற்றச்சாட்டை உருவாக்கி அக்குற்றச்சாட்டை விசாரித்தும் அவரை ஒரு குற்றவாளியாகத் தீர்ப்புக்கொடுக்க முடியாமல் போனது. அக்குற்றச்சாட்டை விசாரித்தவர்கள் அவற்றை நிரூபிக்க முடியாது போனதால் அங்கிருந்த பிரதான சபைத் தலைவர் பின்வருமாறு கூறினார். 'நீ தேவனுடைய புத்திரனா? அதற்கு இயேசு இவ்வாறு பதிலளித்தார்.' 'அப்படியே ஆகும் நான் கடவுளின் வலது பாரிசத்தில் மகிமையின் சேனைகளோடு முகில்களினுடாக வருவதை நீ காண்பாய்.' அந்த நேரத்தில் அந்த பிரதான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியன் அச்சபையைப் பார்த்து பின்வருமாறு கூறினார். சாட்சிகள் மேலும் வேண்டியதில்லை, வேறு குற்றச்சாட்டுக்கள் தேவையில்லை. தானே கடவுள் என்று அவன் வாயினால் கூறக்கேட்டோமே. அதன் அடிப்படையில் இயேசுவை மரண தண்டனைக்குத் தீர்ப்புக்கொடுத்தனர். பின்னர் அவரைக்கல்வாரி மலைக்கு கூட்டிச்சென்று சிலுவை என்னும் மரத்தில் அவரை அறைந்து அவரைத்தூக்கி விட்டார்கள்.

இயேசு மரித்தபின்னர் அக்காலத்தில் வாழ்ந்த இரு தலைவர்கள் அரசனின் அனுமதியைப்பெற்று இயேசுவின் உடலை கௌரவமாகக்கல்லறையில் அடக்கம் செய்தார்கள். அவர் 3 நாட்களின் பின்னர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து, காவலில் இருந்தவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி கல்லறையிலிருந்து வெளியே வந்தார். அக்கல்லறையானது வெறுமையாகியது. இன்று வரை இந்தக் கல்லறையை நாங்கள் ஜெருசலேமில் காணலாம். இயேசு இன்றும் உயிரோடு வாழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயேசுவானவர் ஒரு ஆவியல்ல. அவர் உயிரோடு இருக்கின்றார் என்பதை மனிதர்களுக்கு முன் தோன்றி அவர்களுக்கு அதை நிரூபித்தார். இயேசு சீஷருக்கு தரிசனமாகிக் காண்பித்த போது தோமா என்பவன் அங்கிருக்கவில்லை. அதனை மற்ற சீஷர்கள் அவனிடம் கூறிய போது 'நான் என் கண்களால் அவரைக் காணும் மட்டும், என் கைகளை அவர் விலாவில் விட்டுப்பார்க்கும் மட்டும் விசுவாசிக்க மாட்டேன்' என்று கூறினான். மீண்டும் அவர்கள் எல்லோரும் ஒன்றாக இருந்த நேரத்தில் இயேசு அவர்களுக்கு தரிசனமாகினார். அவ்வேளை தோமாவும் அவர்களுடன் இருந்தான். இயேசு அவரைப்பார்த்து கூறியது என்னவென்றால் 'உன் விரல்களை நீட்டி என் காயங்களைத்தொடு, உன் கையை என் விலாவில் போட்டுப்பார். சந்தேகப்படாமல் விசுவாசி' அந்நேரத்தில் தோமா இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து அவருடைய பாதங்களை முத்தமிட்டான். இயேசு அவ்வேளை பின்வருமாற கூறினார்' தோமா, நீ என்னைக் கண்டு விசுவாசித்தாய் காணாமல் விசுவாசிப்பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியவான்.' சவுல் என்ற கிறிஸ்தவர்களை துன்பப்படுத்துகின்ற ஒருவன் இருந்தான். அவன் தமஸ்கு நகரத்தை நோக்கி கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தப்போகின்ற மத்தியான வேளையில் சூரியனை விட அதிகப்பிரகாசமான வெளிச்சத்தைக் கண்களால் கண்டு தனது குதிரையிலிருந்து கீழே விழுந்து இயேசுவின் குரலைக்கேட்டு அவரைத்தனது இரட்சகராக ஏற்றுக்கொண்டு இயேசுவைப்பற்றி பிரசங்கம் செய்யத்தொடங்கினான். இந்தியாவில் வாழ்ந்த சுந்தர்சிங் என்ற வாலிபன் வேதாகமத்தைக்கிழித்தெறிந்து தனது அறையில் இருந்த வேளையில் இயேசுவைக்கண்டு இயேசு சொன்னவற்றைக் கேட்டு பின்னர் அவரை தனது இரட்சகராக ஏற்றுக்கொண்டு தனது நாட்டிலும் பிற நாடுகளிலும் சென்று இயேசுவைப்பற்றிப் பிரசங்கம் செய்தார்.

இலங்கையின் சிறைகளில் வாழ்ந்து வந்த பல பிரபல சிறைக்கைதிகள் தெற்கில் வாழ்ந்த போதகர்களின் போதனைகளைக்கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கே தங்களது ஜீவியத்தை ஒப்புக்கொடுத்து ஊழியங்கள் செய்தார்கள். அவர்களுக்குள் குறிப்பிடப்படக்கூடியவர்கள் யாரெனில் கராப்பிட்டிய ராஜா, ரும்மஸ்வெல்ல சந்திரா, குருவிற்ற அத்துல என்பவர்களே. இலங்கையின தெற்குப்பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு போதகரின் துண்டுப்பிரசுரத்தைப் பாடசாலையில் படித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஆசிரியர் அதனைப் பிடுங்கி எடுத்து அதற்கு எதிராக எழுத முயற்சித்து, பின்னர் அத்துண்டுப்பிரசுரமே அவ்வாசிரியரை மாற்றி சுயமாகத் தேவ செய்தியைத் துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு பொதுமக்களுக்கு விநியோகித்துத் தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களுக்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் ஒப்புக்கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்காவில் நடைபெற்ற 'மாமு மாவு' புரட்சியின் போது இரத்தத்தில் கையொப்பமிட்டு இப்புரட்சியில் சேர்ந்து கொள்ளுமாறு ஒரு கிறிஸ்தவ குடும்பத்திற்கு ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றது. அக்கடிதத்தில் சேர்த்து கொள்ள மறுக்கும் பட்சத்தில் கொலை செய்யப்படுவீர்கள் என்று எழுதப்பட்டிருந்தது. இக்குடும்பத்தினர் அதைக் கண்டு பயந்து அன்றே மரணம் நிச்சயம் என்று முடிவெடுத்தார்கள். இரண்டாம் கடிதம் கிடைத்தவுடன் இறப்பதற்கு அவர்கள் ஆயத்தப்பட்டிருந்தார்கள். அன்று இரவு இந்தப்புரட்சியாளர் அவர்கள் வீட்டுக்கு வந்து அவர்களிடம் கடைசித்தருணம் தருவதாகக் கூறி அந்தப் புரட்சியாளரோடு சேர்ந்து கொள்ளக் கேட்டார்கள். ஆனால் அவர்களின் பதிலோ ' நாங்கள் உங்களது முதற் கடிதத்தின் படியே இறக்க முடிவு எடுத்துவிட்டோம் என்றனர். 'நாங்கள் வெள்ளையரையோ அல்லது வேறு எவரையுமோ தாக்க விருப்பமில்லாதவர்கள் என்று கூறினார்கள். பின்னர் 'மாமு மாவு' தலைவர் பின்வருமாறு கூறினார். நீங்கள் கிறிஸ்தவர்கள் என்று நாங்கள் அறிவோம். ஆகையால் உங்களுக்கு 02 நிமிடம் தருகின்றோம், ஜெபித்துக்கொள்ளுங்கள்' என்றனர். உடனே இருவரும் முழங்கால் படியிட்டு ஜெபிக்க ஆயத்தமானார்கள். அந்தச் செபத்தை கணவனே பின்வருமாறு செய்தான். 'இயேசுவே, இன்னும் சில நிமிடத்தில் நாங்கள் உமது சந்நிதிக்கு வரப்போவதினால் நன்றி. ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஆண்டவர் தேவனே நாங்கள் உம்மை சந்திப்பதற்கு முன் இவர்கள் உம்மை நோக்கிப்பார்க்க உதவிசெய்யும். ஆமென்' இதன் பின்னர் அவர்கள் அக்கணவரை வாளால் வெட்டிக்கொன்று மனைவியை ஒன்றும் செய்யாமல் விட்டுச் சென்றனர்.

சில நாட்களின் பின்னர் இப்புரட்சித்தலைவன் இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்திக் கூட்டமொன்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்றதுடன் அக்கூட்டத்திலேயே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான். இக்கூட்டத்தில் சாட்சிகொடுக்கும் தருணத்தில் இத்தலைவன் மேடைக்குச் சென்று பின்வருமாறு கூறினார். 'நான் இரத்தங்களைக்கண்ட புரட்சித்தலைவன், நான் கடைசியாச் செய்த கொலையின் போது என்னால் கொலை செய்யப்பட்டவன் எனது இரட்சிப்புக்காக ஜெபித்தான். சில நாட்களின் பின்னர் நான் இரட்சிக்கப்பட்டேன். இயேசு எனது பாவங்களுக்கு மன்னிப்புக்கொடுத்தார். ஆனால் இந்த நாட்டில் ஒரு பெண் மட்டும் என்னை மன்னிக்கவே மாட்டாள். அது யாரென்றால் நான் கொலை செய்தவனின் மனைவியே ஆவாள்'. இதைக் கூறிய பினனர் கண்ணீர் விட்டு அழுதான். அவ்வேளையில் அக்கூட்டத்திலிருந்து ஒரு பெண் சத்தமிட்டு 'நானே அப்பெண்' என்று கூறி மேடைக்கு வந்தாள். அவள் கூறியது என்னவென்றால் 'நான் உனக்கு அன்றே மன்னிப்புகொடுத்து விட்டேன்'. இயேசுவை வழிப்படுகின்றவர்களும் அவரைத் தெரிந்தவர்களும் அவரைப் போலவே தமக்கு குற்றம் செய்தவர்களை மன்னித்து விடுவார்கள்.

இயேசு இன்னும் உயிரோடு வாழ்பவராய் இருப்பதனால், இன்றும் மனிதர்களின் வாழ்க்கையில் மாற்றங்களைச் செய்ய வல்லவராய் உள்ளார். இயேசு மரணத்தை ஜெயித்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததினால் இன்றும் உயிரோடு இருப்பவர்களுக்கு அவர் உதவி செய்கிறவராய் இருக்கிறார். எங்கள் வாழ்க்கையை அவர் மாற்றம் செய்ய வல்லவராய் உள்ளார். இயேசு மரித்துப் போனவர்களையும் வாழ வைக்கிறவராய் உள்ளார். இவ்வாறு மரித்துப்போனவர்களும் பரலோகத்திற்கு செல்ல இயேசு வழிவகுத்தார். இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து நித்திய ஜீவனுள்ளவராய் இருக்கிறார். அவர் மீண்டும் மரிப்பதில்லை. உலக முடிவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரோடு இருக்கும் நாங்களும் நித்திய ஜீவனை அடைய அவர் உதவி செய்வார். அதனூடாக நாங்களும் பரலோகத்தில் வீற்றிருப்போம்.

இயேசு அன்று போல இன்றும் நோய்களைக் குணமாக்குகிறார். பலவிதமான கட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கிறார். பல்வேறு பிழையான பழக்க வழக்கங்களிலிருந்து எமக்கு விடுதலை அளிக்கின்றார். நாங்கள் கூறுவதை எல்லாம் அவர் கேட்டுக்கொண்டே உள்ளார். நீங்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு தயவு, கருணை காட்டுகிறவராய் உள்ளார்.
உங்களால் பின்வருமாறு கூற முடியும்.

**"இயேசுவே இரட்சகரே, கிருபையின் தேவனே எமக்கு இரக்கமாய் இரும். இயேசுவே என்னை ஆசீர்வதியும்."**

இதைக் கூறுகின்ற போது நீங்கள் சமாதானம் பெறுவதை உணருவீர்கள்



**மேலும் இயேசுவைப் பற்றி அறிய ஆவலாய் இருப்பின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தபால் அட்டையை நிரப்பி அனுப்பவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி ஸ்தாபனத்தால் கடந்த 43 வருடங்களாகச் சுவிஷேச துண்டுப்பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிறுவனத்தின் நோக்கமானது இத்துண்டுப்பிதிகளை வாசிப்பவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப்பற்றிய விசுவாசத்தை அதிகரிப்பதே ஆகும்.

கிறிஸ்துவின் இரட்சிப்பைக்குறிக்கும் வேதபாடத்தை ஒழுங்காக செய்து முடிக்கின்ற மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

**இப்பாடத்தின் தலைப்புகள்**

அ. பரிசுத்த வேதாகமம்
ஆ. கடவுள்
இ. மனிதன்
ஈ. பாவம்
உ. இயேசு கிறிஸ்து
ஊ. நித்திய ஜீவன்

இது போன்ற துண்டுப்பிரதிகளை வாசித்த பலர் ஆசீர்வாதம் பெற்றதுடன் இயேசு கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

நீங்கள் இப்பாடத்திட்டத்தைப்பூர்த்தி செய்து ஒரு டிப்ளோமா சான்றிதழைப்பெற்றுக் கொள்ள விருப்பம் இருப்பின் அடுத்த பக்கத்தில் உள்ள தபால் அட்டையைப்பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு

**இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி**
**இல.6, பார்க் பிளேஸ்,**
**கொழும்பு - 05**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தின் மூலம் இரட்சிப்பின் செய்தியை அறிந்துக் கொண்டேன்.

☐ மேலும் கூடுதலாக இயேசு கிறிஸ்துவைக்குறித்து அறிய விரும்புகிறேன்.

☐ தங்கள் இலவச தபால் மூல வேதபாடத்தை கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

பெயர் :........................................................................................................

விலாசம் :........................................................................................................

........................................................................................................

........................................................................................................

தொலைபேசி:.................................... மாவட்டம்:............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் அட்டை

முத்திரை

**Ceylon Every Home Crusade**
**No.6, Park Place,**
**Colombo - 5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org